# பட்டயம்

மலர் - 05 அக்டோபர் - 2009 இதழ் - 12

Date of Issue : 01-10-2009

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 5

Issue : 12 Price Per Copy : Rs.5.00




"BEWARE OF FALSE PROPHETS"
- MATTHEW 7/15

O LORD! SAVE US FROM FALSE PROPHETS.

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

**95. இரட்சிப்பின் அனுபவத்திற்குள் இருப்பவர்கள் எப்படி காணப்படுவர்கள்?**

**1.** சங் 51/12 - ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டிருந்தால் அவனிடம் இரட்சிப்பின் சந்தோஷம் இருக்கும். 'இரட்சிப்பின் சந்தோஷம்' உனக்குள் இல்லையென்றால், நீ இன்னும் இரட்சிக்கப்படவில்லை. சிலர் இரட்சிக்கப்பட்டபின் பழைய பாவ பழக்கங்களில் விழுந்து போய், இரட்சிப்பின் அனுபவத்தையும், இரட்சிப்பின் சந்தோஷத்தையும் இழந்து போகிறார்கள். நீ பெற்ற இரட்சிப்பை இழந்து போவாயானால், உனக்குள் இரட்சிப்பின் சந்தோஷம் இருக்காது.

**2.** உற்சாகமான ஆவியுள்ளவர்களாய் இருப்பார்கள். இரட்சிப்பின் சந்தோஷம் இல்லாதவனிடம் உற்சாகமான ஆவி இருக்காது. அவன் எதிலும் எரிச்சலும், கோபமும், மூர்க்கமும் உள்ளவனாக இருப்பான். தாறுமாறின் ஆவி உனக்குள் இருந்தால் நீ பெற்ற இரட்சிப்பில் நிலை நிற்கவில்லை.

**3.** இரட்சிப்பின் சந்தோஷம் உள்ளவர்கள் தங்கள் வாயினால் தேவனை அதிகமாகத் துதிப்பார்கள் (சங்.51/15). இரட்சிப்பின் சந்தோஷம் இல்லாதவர்கள் வாயில் அல்லேலூயா கூட சொல்ல வராது. சிலருக்கு இருதயத்தில் பெருமை, கர்வம், ஆணவம், அகங்காரம், மேட்டிமை, இச்சை, சுயம் நிறைந்திருக்கிறது. ஆகவே அவர்களால் தேவனைத் துதிக்க முடியாது.

**4.** இரட்சிப்பின் அனுபவம் உள்ளவர்களிடம் நொறுங்குண்ட ஆவி இருக்கும். அவர்கள் சிறு தவறுகளையும் உணர்ந்து மன்னிப்பு பெற்று ஒப்புரவாவார்கள். பிறருக்கு விரோதமாக தவறு செய்தால் ஒருவருக்கொருவர் மன்னிப்பு கேட்டு ஒப்புரவாவார்கள்; ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பார்கள். நொறுங்குண்ட ஆவியில்லாதவர்களுக்கு செய்த தவறுகளைப் பற்றிய வருத்தமோ, துக்கமோ வராது. அவர்கள் துணிகரமாக பாவம் செய்வார்கள். மனிதனைக் குறித்தோ, தேவனைக் குறித்தோ அவர்களுக்கு பயம் வராது.

**5.** இரட்சிப்பின் அனுபவம் உள்ளவர்கள் பாவத்திற்கு இடம் கொடுக்க மாட்டார்கள்.(சங் 51/10). பாவத்தை விட்டு விலகுவார்கள். அவர்கள் இருதயம் பரிசுத்தமாயிருக்கும். இரட்சிப்பின் அனுபவம்

இல்லாதவன் எந்த இடத்திற்கு போக கூடாதோ, அங்கே தான் போவான். பரியாசக்காரன் உட்காருமிடத்தில் போய் உட்கார்ந்து துன்மார்க்கரின் ஆலோசனைக்குச் செவி கொடுப்பான்.

**6.** இரட்சிப்பின் அனுபவம் உள்ளவர்கள் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தரைத் தொழுது கொள்வார்கள் (சங் 116/13)

**7.** இரட்சிப்பின் சந்தோஷம் இருப்பவன் வாழ்விலும், தாழ்விலும் சந்தோஷமாக இருப்பான். இரட்சிப்பின் சந்தோஷம் இல்லாதவர்களுக்கு குறைவு வரும் போது சந்தோஷமெல்லாம் போய் விடும். (பி4/11,12)

**96. 'ஜீவனுள்ள கற்களாக' மாற என்ன செய்ய வேண்டும்? (1 பேது 2/5) ஜீவனுள்ள கற்களாக மாற வேண்டுமானால்**

**1.** கிறிஸ்துவின் ஜீவனைப் பெற வேண்டும் ( Iகொரி 4/10)

**2.** ஜீவ ஒளியைப் பெற வேண்டும் (யோ 8/12)

**3.** தேவ ஆவியைப் பெற வேண்டும் (ரோமர் 8/9)
இந்த மூன்றும் பெறும் போது நாம் ஆண்டவர் விரும்பும் வாழ்க்கைக்குள் வருகிறோம்.

**4.** இயேசுவின் வல்லமையைப் பெற வேண்டும். சாத்தான் நம்மை மேற்கொள்ளுகிறானென்றால் நாம் இன்னும் ஜீவனுள்ள கற்களாக மாறவில்லை. ( அப் 1/8)

**5.** பரிசுத்த அலங்காரமுள்ளவர்களாக மாற வேண்டும். அசுத்த ஜீவியம் காணப்படக்கூடாது. வாயின் வார்த்தைகள், எண்ணங்கள், பார்வைகள், கரத்தின் கிரியைகள் சுத்தமாக இருக்க வேண்டும். கேட்பவைகள் சுத்தமாக இருக்க வேண்டும். நீ தேவனால் பிறந்தவனாயிருந்தால் பாவம் செய்யமாட்டாய். ஆண்டவருக்குத் தேவை ஜீவனுள்ள கற்கள். ஒவ்வொருவரும் ஒரு ஜீவனுள்ள கல்லாக மாறும் போது தேவன் அந்த ஜீவனுள்ள கற்களைக் கொண்டு தம் சபையைக் கட்டுவார். இந்திய தேசத்திலே எழுப்புதல் வர வேண்டுமானால் முதலாவது ஜீவனுள்ள கற்கள் எழும்ப வேண்டும்.

**97. ஜீவனுள்ள கற்களைக் கொண்டு சபை எப்படி கட்டப்படுகிறது?**

'இந்த கல்ன் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. (மத். 10/18). பாதாளத்தின்

வாசல்கள் இந்த கடைசி கொடிதான காலங்களில் நம்மோடு போராடும். கடைசிகாலம் கொடிதான காலம் என (II தீ. 3/1) கூறுகிறது.

பேதுரு என்றால் 'பாறை' என பொருள். பாறை எப்படி உறுதியாயிருக்கின்றதோ அப்படியே நாம் **உறுதியுள்ள** ஆத்துமாக்களாக இருக்க வேண்டும். கர்த்தருக்கென்று **வைராக்கியமாக** இருக்க வேண்டும். பேதுருவைப் போல இல்லாவிட்டால் நம்மைக் கொண்டு சபை கட்டப்பட முடியாது.

கையில் பணம் இருந்தவுடன் சபை கட்டப்பட முடியாது. **பொருளாசை இல்லாதவர்களைக்** கொண்டு தான் சபை கட்டியெழுப்பப்பட முடியும். தீமை வந்தவுடன் கர்த்தரை விட்டும், சபையை விட்டும் பின்வாங்கிப் போகிற ஆத்துமாக்களைக் கொண்டு சபை கட்டப்பட முடியாது.

**ஜீவனுள்ள கற்களை** வைத்து கட்டுவது தான் சபை. ஜீவனுள்ள கற்களாக பேதுருவைப் போல மாற வேண்டும். அப்போது தான் சபை உருவாகும். அவர் ஜீவன் நம்மில் காணப்படும் போது தான் நாம் ஜீவனுள்ள கற்களாக மாற முடியும். **இயேசுவின் ஜீவன்** நம் சரீரத்திலே விளங்கும்படிக்கு அவர் மரணத்தை எப்பொழுதும் நம் சரீரத்திலே சுமந்து திரிகிறவர்களாக இருக்க வேண்டும் (II கொரி 4/10).

இந்த ஜீவனுள்ள கற்கள் **பரிசுத்த ஆவியைக்** காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். ஆவியைப் பெறாதவர்களைக் கொண்டு சபை கட்டப்பட முடியாது. ஜீவனுள்ள கற்களாக, இசைவாக, ஆவிக்கேற்ற மாளிகையாக நாம் எழும்பும் போது சபை எழும்புகிறது. சபையானது **சாத்தான் மேல் ஜெயம் எடுக்க வேண்டும்.** இதைத்தான் இந்த கல்ன் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என இயேசு சொன்னார். சபை உருவாகத் தக்கதாக ஒவ்வொருவரும் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். **'பரிசுத்தம்'** நம் அலங்காரமாக இருக்க வேண்டும். இன்னும் அசுத்தம் உன்னில் காணப்படுமானால் நீ சபைக்கு பங்காளி அல்ல ; **அன்பு, பரி.ஆவி, அக்கினி** வல்லமை உனக்கு அலங்காரமாக இருக்க வேண்டும். சபை எழும்பும் போது சாத்தான் ராஜ்யம் அழிக்கப்படும்.

ஆத்துமாக்களை மாத்திரம் கட்டியெழுப்பினால் போதாது. **இடமும் கட்டியெழுப்பபட வேண்டும்.** தேவனுடைய ஆலயம் கட்டியெழுப்பபட

வேண்டும். ஆலயம் என்பது ஆத்துமாக்கள் கூடுகிற ஸ்தானம் மட்டுமல்ல, அங்கே ஆண்டவரும் வருகிறார். அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்ற விசுவாசத்தோடு கூடாரத்தை விஸ்தாரமாக்க வேண்டும். (ஏசாயா 54/2).

உமக்கு உகந்த ஜீவனுள்ள கல்லாக என்னை மாற்றும் என ஜெபிக்க வேண்டும். ஜீவனுள்ள கற்கள் இசைவாய் காணப்பட வேண்டும். ஒரு கல்லின் மேல் இன்னொரு கல் **இசைவாய் இருக்க வேண்டும்.** அப்போது சபை கட்டியெழுப்பப்படும்.

## 98. அந்நிய பாஷை என்றால் என்ன?

அந்நிய பாஷை மனுஷர் பாஷையாகவும் இருக்கலாம் ; அல்லது தூதர் பாஷையாகவும் இருக்கலாம். நாம் நினைத்துப் பேசுகிற பாஷை அல்ல இது ; நாம் தமிழில் பேசும் போது, அதை மூளையில் நினைத்துப் பேசுகிறோம். மனுஷனுக்கு ஆவி, ஆத்துமா, சரீரம் உண்டு, சரீரத்தில் தான் மூளை, இருதயம் இருக்கிறது. மூளை அறிவு, இருதய உணர்வு சரீரத்தில் தான் இருக்கிறது. மூளை அறிந்து கொள்கிறது ; மூளை அறிவினால் தெரிந்த பாஷையைப் பேசுகிறோம். மூளை அறிவுக்கு சம்பந்தம் இல்லாத பாஷை தான் அந்நிய பாஷை. இது இதயத்தினாலோ, மூளையினாலோ பேசப்படுவது இல்லை. ஆகவே தான் கருத்து பயனற்றது என போடப்பட்டிருக்கிறது. (Iகொரி.14/14)

நம் ஆவியைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் பேசும் பாஷை இது. பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார் என ஏசாயா 28/11 ல் வாசிக்கிறோம். இந்த அந்நிய பாஷை பரிசுத்தாவியைப் பெற்றிருப்பதற்கு அடையாளமாகும்.

## 99. ஏன் அந்நிய பாஷையில் ஜெபிக்க வேண்டும்?

அந்திய பாஷையிலே பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசுகிறான் (Iகொரி.14/2). ஆவியானவர் பேசுகிறபடியால் நாம் பேசுவது முழுவதுமாக நமக்குப் புரியாது. ஆண்டவர் அர்த்தம் சொல்லித் தந்தால் தான் அந்நிய பாஷையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஆகவே தான் அது இரகசியம் என சொல்லப்பட்டிருக்கிறது. அந்நிய பாஷையில் ஜெபிக்கும் போது சாத்தானுக்கும் விளங்காது; துன்மார்க்கனுக்கும் விளங்காது. ஆனால் அந்த ஜெபம் பரலோகத்திற்குச் செல்லும். அந்நிய பாஷையில் ஜெபிப்பது நமக்கு தெரியாவிட்டாலும் எதற்காக ஜெபிக்க வேண்டுமோ அதற்காக ஆவியானவர் நம் மூலம் ஜெபிப்பார்.

பரிசுத்தாவியில் நிறைந்து ஜெபிக்கும் போது அந்த நேரத்திற்கு என்ன ஜெபம் தேவையோ, அந்த ஜெபத்தை ஆவியானவர் ஜெபிப்பார். பாயாசம் செய்யும் போது சீனி குறைந்து போனால் சீனி வாங்கி வரும்படி 1 நபரை அனுப்புகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். அந்த நபர் சீனிக்கு பதிலாக உப்பை வாங்கி வந்தால் என்ன சொல்வீர்கள். எனக்கு இப்போது தேவை சீனி, உப்பல்ல என சொல்வோம் அல்லவா? அது போல எத்தனையோ காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டியது இருக்கலாம். ஆனால் இப்போது எதற்காக ஜெபிக்க வேண்டுமோ அதற்காக ஆவியானவர் ஜெபிப்பார். ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியது இன்னதென்று நமக்குத் தெரியாது. ஆனால் ஆவியானவர் நமக்காகப் பரிந்து பேசுவார். அவர் வாக்குக்கடங்காத பெருமூச்சு களோடு நமக்காக நம் ஆவியைக் கொண்டு ஜெபிப்பார். (ரோமர் 8/26)

நாம் ஒரு வேளை நம் சித்தப்படி ஜெபிக்கலாம். ஆனால் ஆவியானவர் பரிசுத்தவான்களுக்காக தேவனுடைய சித்தத்தின் படியாக ஜெபிப்பார். ஆகவே மனுஷசித்தம் தடைபடும் ; தேவசித்தம் நிறைவேறும். (ரோமர் 8/27)

பரிசுத்தாவியினால் ஜெபிக்கிற ஜெபத்தினால் தான் பிசாசின் தலையை உடைக்க முடியும். அசுத்த ஆவிக்கு விரோதமாக ஆவியானவர் தான் யுத்தம் பண்ண முடியும். எந்த அளவுக்கு அந்நிய பாஷையில் ஜெபிக்கிறோமோ அந்த அளவுக்கு இளைப்பாறுதலும், ஆறுதலும் பெற முடியும். எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் கிடைக்கும். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிரம்பி ஜெபியுங்கள் (எபே 5/18) (மத் 12/28)

**100. அந்நிய பாஷையில் ஜெபிப்பவனுக்கு அதன் அர்த்தம் தெரியுமா?**

ஒருவரும் அந்நிய பாஷையை அறிந்து கொள்ள முடியாது. பேசுகிறவனுக்கு தேவன் வெளிப்படுத்தினால் அவன் அதை அறிந்து கொள்வான் (I கொரி 14/13). ஆனால் தேவனிடம் ஜெபித்து அதன் அர்த்தத்தைக் கேட்டால் அதை சொல்லிக்கொடுப்பார். அதன் அர்த்தம் எழுத்துக்கு எழுத்து தெரியாவிட்டாலும், அதன் கருத்து என்ன என்பது புரியும் ; அதை ஆவியில் உணர முடியும். அந்நிய பாஷையில் ஜெபிக்கும் போது நம் ஆவி விண்ணப்பம் பண்ணும் ; ஆனால் கருத்து பயனற்றதாயிருக்கும். கருத்தைச் சொல்லித்தாரும் என கேட்டால், அந்தக் கருத்தைச் சொல்லித் தருவார். அந்த கருத்தினால் மூளை அறிவைக் கொண்டு ஜெபிக்கலாம். அப்படி ஜெபிக்கும் போது கருத்தோடும்

ஜெபிக்கிறோம் ; ஆவியோடும் ஜெபிக்கிறோம். அந்த ஜெபம் வல்லமையுள்ளதாயிருக்கும். ஆவியோடு விண்ணப்பம் பண்ணும் போது தேவசித்தப்படி ஜெபிக்க முடிகிறது. ஆவியினால் ஜெபிக்கும் போது நாம் ஏற்ற காரியத்திற்காய் ஜெபிக்க முடியும்.

**101. உலக சிநேகமுள்ளவர்கள் ஏன் பரிசுத்தாவியை பெற்றுக் கொள்ள முடியாது?**

உலக சிநேகமுள்ளவர்கள் பரிசுத்தாவியை பெற்றுக் கொள்ள முடியாது. உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது (யோவான் 14/17). உலக சிநேகம் உனக்குள் இருக்கும் வரை பரிசுத்தாவியை நீ பெற முடியாது. உலக சிநேகம் என்பது கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமையைக் குறிக்கும். உலக சிநேகம் என்பது வஞ்சக ஆவியாகும். இந்த உலகத்தின் ஆவியை விட்டு வெளியே வரும் போது தான் பரிசுத்தாவியைப் பெற முடியும். உலகமும் வேண்டும், ஆண்டவரும் வேண்டுமென்றிருந்தால் பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ள முடியாது.

**102. வஞ்சிக்கிற ஆவியை எப்படி கண்டு பிடிக்க முடியும்?**

சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்க வேண்டும். அந்திக் கிறிஸ்துவின் ஆவி ஒரு வகை வஞ்சக ஆவி, உலக சிநேக ஆவி. கிறிஸ்துவைப் பற்றியும் சொல்லும், அதே சமயம் உலக சிநேகத்திற்குள்ளும், உலக ஆடம்பரத்திற்குள்ளும் உலக இச்சைகளுக்கும் இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாவற்றிலும் பெருமை தான் இருக்கும். மனுஷ மகிமையை நம்பி ஓடுகிறவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள முடியாது. பிசாசு இயேசுவிடம் தன்னைப் பணிந்து கொண்டால் எல்லா மகிமையையும் தருவதாக கூறியது. ஆண்டவரால் வரும் மகிமையை பெற்றால் போதும் என இருக்க வேண்டும். பூலோகத்தில் மனுஷரால் வரும் மகிமையைப் பெரிதாக எண்ணி வஞ்சிக்கப்பட்டு விடாதிருங்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை (யாக் 4/4). சுயமகிமையைத் தேடாதே (யோ 7/17). தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவன் உண்மையுள்ளவன். சுயமகிமையையும், குடும்பத்தின் மகிமையையும் மாத்திரம் தேடுவாயானால் நீ உண்மையுள்ளவன் அல்ல. யார் ஆண்டவரின் மகிமையை மட்டுமே தேடுகிறார்களோ அவர்கள் உண்மையுள்ளவர்கள். அவர்களிடம் அநீதி இருக்காது. அநீதி இல்லாதவனிடம் தான் பரிசுத்த ஆவியானவர் வருவார். அநீதி உள்ளவன் வஞ்சிக்கிற ஆவி உள்ளவன்.

## 103. ஆவியின் வரங்களைப் பெற எப்படி ஜெபிக்க வேண்டும்?

"நீர் தருகிற வரத்தை உம் சித்தப்படி மாத்திரமே பயன்படுத்துவேன்; நீர் இந்த வரத்தைத் தந்தால் உம்மை மகிமைப்படுத்தும்படி மாத்திரமே பயன்படுத்துவேன்" என ஜெபிக்க வேண்டும். இந்த வரத்தினால் வருகிற மகிமையை நான் எனக்கென்று எடுத்துக் கொள்ள மாட்டேன் என்று ஜெபித்தால் தான் வரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். தேவ ஆவியானவர் வரத்தைக் கொடுக்கிறாரென்றால் அது அவரை மகிமைப்படுத்துவதற்காக மட்டுமே. உமது அநாதி தீர்மானத்தின்படி என்ன சித்தத்திற்காக என்னை வனைந்தீரோ அந்த சித்தத்தின்படியான சகல ஞானமும் எனக்கு சம்பூரணமாய் தாரும். அந்த ஞானத்தினால் உம்மை நான் மகிமைப்படுத்துவேன் என கேளுங்கள். அநேகர் இன்னும் பணத்தையும், பொருளையும் தான் தேவனிடம் கேட்கிறார்கள். கேட்கத் தகுந்தவைகளையும், மேன்மையானவைகளையும் தேவனிடம் கேளுங்கள். நன்மையானவைகளைக் கேட்டால் நிச்சயம் தருவார். தேவ சித்தமில்லாதது நமக்குத் தீமையானது. அதை தேவனிடம் நாம் கேட்கக்கூடாது.

## 104. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளத் தேவையான தகுதிகள் எவைகள்?

பரிசுத்த ஆவியை பெறுவதற்கு தடையாக எவைகளெல்லாம் இருக்கிறதோ அவைகளையெல்லாம் விட்டு விட வேண்டும். பழைய வஸ்திரத்தோடே கோடி துண்டை தேவன் சேர்க்கமாட்டார். பழைய சுபாவங்களை விட்டு விட வேண்டும் ; இல்லையென்றால் பரிசுத்தாவியைப் பெற முடியாது. ஆண்டவர் விரும்புகிற அவருக்கு பிரியமான வாழ்க்கைக்குள் வர வேண்டும். பழைய துருத்திகளாக இருக்கக்கூடாது. புது துருத்திகளாக, புது வஸ்திரமாக மாற வேண்டும். அப்பொழுது புது ரசமாகிய பரிசுத்த ஆவியை ஆண்டவர் நம் மேல் ஊற்றுவார். (மத் 9/17). பயத்தோடு கர்த்தரை சேவியுங்கள் ; நடுக்கத்தோடு களிகூருங்கள் (சங் 2/11). பயம், பக்தி, நடுக்கம், பரிசுத்தம், உண்மை, உத்தமம், உறுதி - இந்த 7 தகுதிகளும் நமக்குள் இருந்தால் தான் ஆவியானவர் நமக்குள் வருவார்.

## 105. சாத்தானால் ஏவப்படுதல் என்றால் என்ன? சாத்தான் ஆவிக்குரியவர்களை தன் ஏவுதலினால் எப்படி தவறு செய்யத் தூண்டுகிறான்?

சாத்தான் இஸ்ரவேலை தொகையிடுகிறதற்கு தாவீதை ஏவிவிட்டது.

சாத்தான் தேவபிள்ளைக்கு விரோதமாக எழும்பலாம் ; சாத்தான்

தேவ பிள்ளையை ஏவலாம். எனக்கு பின்னாகப் போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் என இயேசு (மத் 16/23) பேதுருவை கடிந்து கொள்கிறார். பேதுருவை சாத்தான் என இயேசு சொல்லவில்லை. பேதுருவுக்குள் இருந்து கிரியை செய்த சாத்தானை இயேசு கடிந்து கொண்டார். பேதுருவுக்குள் இருந்த ஆவி அவனை தேவனுக்குச் சித்தமில்லாததை பேசும்படி ஏவினது. தேவனுக்கு சித்தமில்லாததை சிந்திக்கும்படி ஏவினது.

நாம் பிசாசுக்கு இடம் கொடுக்கும் போது அது பல விதங்களில் நம் மூலம் கிரியை செய்யலாம். தாவீதை இஸ்ரவேலைத் தொகையிடும்படி சாத்தான் ஏவினான்.

1. தேவனுக்குச் சித்தமில்லாத காரியத்தைச் செய்யும்படி சாத்தான் நம்மை ஏவலாம்.

2. தேவனுக்கு சித்தமில்லாத காரியத்தை பேசும்படி ஏவலாம்.

3. தேவனுக்கு சித்தமில்லாத காரியத்தைச் சிந்திக்கும்படி ஏவலாம்.

பேதுரு மூலம் தேவனுக்குச் சித்தமில்லாத காரியத்தை நினைக்கும்படியும், பேசும்படியும் ஏவினான். தாவீது மூலம் தேவனுக்கு சித்தமில்லாத காரியத்தைச் செய்யும்படி ஏவினான். மொத்தம் எத்தனை போர்வீரர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணுவது தவறா என நாம் நினைக்கலாம். தாவீது தன் சுயபெலத்தினால் தான் ஜெயமெடுத்து விட்டேன் என்ற எண்ணத்துக்குள் வந்தபடியால் வீரர்களை தொகையிட சாத்தான் ஏவினான்.

இரவும் பகலும் கர்த்தரை நோக்கி ஜெயிப்பவர்களே இஸ்ரவேலர்கள். ஆவிக்குரிய இஸ்ரவேலர்களுக்கு விரோதமாக சாத்தான் எழும்புவான்.

4. நம் சுயபெலத்தைக் நம்பி ஜீவிக்கும்படி சாத்தான் ஏவலாம்.

5. நம் சுயபெலத்தைக் கொண்டு பெருமைபாராட்டும்படி ஏவலாம். நாம் தேவபெலத்தால், உதவியால், கிருபையால் சில காரியங்களைச் செய்யலாம். சாத்தான் நாம் இவைகளை நம் சுயபெலத்தினால், சுயஞானத்தினால் செய்துவிட்டோம் என நம்மைச் சிந்திக்கத் தூண்டுவான். இந்த எண்ணங்களுக்கு நாம் இடம் கொடுக்கும் போது ஜீவனத்தின் பெருமையில் நாம் விழுந்து விடுவோம். அப்போது சாத்தான் நம்மை மேற்கொள்ளுவான். ஆகவே தேவன் உங்களைப்

பயன்படுத்தும் போது உங்களைத் தாழ்த்துங்கள். தாழ்மையுள்ள வர்களுக்கு கிருபை கொடுப்பார். (யாக் 4/6)

என் சாமர்த்தியத்தினால், ஞானத்தால், இந்த காரியத்தைச் செய்துவிட்டேன் என இஸ்ரவேல் நினைக்ககூடாது (உபாகமம் 8/17,18) தேவபிள்ளைகள் அப்படி நினைக்கவும்கூடாது, பேசவும் கூடாது. தாவீது பாவம் செய்தவுடன் தேவனுக்கு கோபம் வந்தது. இந்த காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாதபடியால் அவர் இஸ்ரவேலை வாதித்தார். (Iநாளா 21/7). தேவனுக்கு விரோதமாக நாம் சுயத்தில், ஜீவனத்தின் பெருமையில் விழுவோமென்றால் அவரே நமக்கு விரோதமாக எழும்புவார். தேவனே நமக்கு விரோதமாக எழும்பதக்கதாக சாத்தான் நம்மை ஏவலாம். சாத்தான் என்னை ஏவினாலும், நான் அவனுக்கு கீழ்படியமாட்டேன் என உறுதியாய் இருங்கள். அப்போது தேவனின் ஆக்கினையும் தண்டனையும் நம் மேல் வராது.

பொன், படிப்பு, பணம், பொருள் இவைகளின் மேல் நம்பிக்கை வைத்தால் அது தேவனுக்கு விரோதமான பாவமாகும். உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு ஆதரவு என சொல்லக்கூடாது ; கர்த்தரே உன் ஆதரவாக இருக்க வேண்டும். இஸ்ரவேலர்களின் கால்கள் வனாந்தரத்திலே வீங்கவில்லை. அதாவது அவர்களுக்கு வியாதி எதுவும் வரவில்லை. நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக இருந்தால் வரப்போகிற பெரிய பெரிய கொள்ளை நோய்களுக்கு தேவன் நம்மை விலக்கிக் காப்பார்.

இஸ்ரவேல் எப்பொழுதும் தேவ கிருபையை சார்ந்து வாழவேண்டும். 'பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்' என அவர் இரக்கத்திற்காய் கெஞ்ச வேண்டும். தேவகிருபையைச் சாராமல் சுயத்தைச் சார்ந்து நம்பும்படி பிசாசு தூண்டுவான். அப்போது மத் 16/22 ன் படி எனக்குப் பின்னாலே போ சாத்தானே என கடிந்து கொள்ள வேண்டும். மத் 4/10 ன் படி அப்பாலே போ சாத்தானே என கடிந்து கொள்ள வேண்டும். நாமும் கடிந்து கொள்ள வேண்டும். கர்த்தர் உன்னை கடிந்து கொள்வாராக என்றும் சொல்ல வேண்டும். (சகரியா 3/2)

சாத்தான் நம்மை ஏவினாலும் நாம் அதற்குக் கீழ்ப்படியக்கூடாது. 'இந்தக் கனியைப் புசிக்கும் நாளிலே நீங்கள் சாகவே சாவீர்கள்' என ஆண்டவர் ஆதாம் ஏவாளிடம் சொன்னார். சாத்தானோ நீங்கள் சாகவே சாவதில்லை இதை புசிக்கும் நாளிலே நீங்கள் தேவர்களைப் போல ஆவீர்கள்" என சொன்னான்.

**6.** கடவுளுக்குச் சமமாகலாம் என்ற எண்ணத்தை பிசாசு ஏவலாம். இந்த ஏவுதலுக்கு ஏவாள் கீழ்ப்படிந்தாள். ஏவாள் சொல்லுக்கு ஆதாமும் கீழ்ப்படிந்தான். (ஆதி 3/4,5)

**7.** பேராசைப்படும்படி சாத்தான் ஏவலாம் - போதும் என்ற எண்ணம் இல்லாமல் எப்போதும் போதாது என எண்ணுகிறோமோ அது பேராசை. போதும் என்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் . கர்த்தருக்குச் சித்தமானது எனக்கு கிடைக்கட்டும் என ஜெபிக்க வேண்டும். ஆண்டவர் கரத்திருந்து கிடைக்க வேண்டும் என ஜெபிக்க வேண்டும். போதாது என்ற மனதோடு கண்ணிகளில் மாட்டினால், நாம் சாத்தான் கைகளில் சிக்கிக் கொள்வோம்.

**8.** தேவ ஆலோசனைக்கு செவிகொடுக்காமல் சுயபுத்தியின் மேல் சாரும்படி சாத்தான் தூண்டுவான் (நீதி 3/5). சுயபுத்தியின் படி நடப்பது என்றால் நம் விருப்பப்படி காரியங்களை செய்வதும், பிறரை அந்த திட்டத்திற்கு உட்படுத்துவதுமாகும். தேவ சித்தமானதா என ஆராய்ந்து, தேவனிடம் கேட்டு எதையும் செய்ய வேண்டும். தேவனுக்குச் சித்தமான காரியங்களை தேவன் ஒப்புக்கொடுத்தால் மனிதன் தடுக்கலாம். சில காலம் நிறுத்தி வைக்கவாம். ஆனால் அந்தக் காரியங்களை ஒழிக்க முடியாது. தேவனுக்குச் சித்தமான காரியங்களை எவனும் ஒழிக்க முடியாது. பிசாசு நம்மை நம் சுயபுத்தியின் மேல் சாய்ந்து சில காரியங்களை செய்யும்படி ஏவினாலும் அதற்குக் கீழ்படியக் கூடாது. தேவசித்தமில்லாததைச் செய்யாதே.

**106. சாத்தான் ஏவுதலா அல்லது கர்த்தரின் ஏவுதலா என்பதை எப்படி தெரிந்து கொள்வது?**

ஒரு நல்ல காரியம் நீங்கள் செய்ய ஒரு ஏவுதல் உங்களுக்குள் வருகிறது. இது தேவனால் வந்த ஏவுதலா அல்லது பிசாசினால் வந்த ஏவுதலா என்பதை கீழ்கண்ட விதத்தில் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

1. ஆண்டவரால் வரும் ஏவுதலானால் நாம் நினைத்தும் அதை நிறுத்த முடியாது. நாம் வேண்டாம் என நிறுத்தினாலும் அது நம்மை மிஞ்சிப்போகும். பிசாசினால் வரும் ஏவுதலாக இருந்தால் நாம் நிறுத்த வேண்டுமென்றிருந்தால் அதை நிறுத்தி விடலாம்.

2. தேவனுக்குச் சித்தமானதை நாம் செய்யும் போது, நம் இதயத்தில் சமாதானமும், சந்தோஷமும் இருக்கும். தேவனுக்குச் சித்தமில்லாததைச் செய்தால் குழப்பமும், சஞ்சலமுமே வரும்.

3. தேவனுக்குச் சித்தமானதைச் செய்யும் போது, மனிதன் அதைத் தடுத்தாலும் அது கட்டாயம் நிறைவேறும். தேவன் செய்ய நினைத்த காரியம் ஒரு நாளும் தடைபடாது (யோபு.42/2). அவர் செய்ய நினைத்த காரியம் நடந்தே தீரும். தேவனோடு போர் செய்யாதபடிக்குப் பாருங்கள். தேவனால் உண்டான காரியங்களை ஒழித்து விட முடியாது.

4. தேவன் செய்வது எதுவோ அது என்றென்றைக்கும் நிற்கும். அதனோடே ஒன்றையும் கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது. தேவன் செய்வது எதுவோ அது ஒழிந்து போகாது. தேவசித்தம் பரிபூரணமாக நிறைவேற அது நிலைத்திருக்கும். தேவனுக்கு சித்தமில்லாதது நிலைத்திருக்காது. தேவன் கோணலாக்கினதை நேராக்க முடியாது (பிரசங்கி.7/13). தேவன் எப்படி வைத்தாரோ அது அப்படியே இருக்கும் ; மனுஷனுடைய சித்தத்தின் படி அல்ல ; அவர் தம் பரிபூரண சித்தத்தின்படி செய்வார்.

நம் இஷ்டப்படி சில காரியங்களை செய்ய பிசாசு ஏவுவான். நாம் அதற்கு இடம் கொடுக்க கூடாது. நாம் ஒழுங்காக ஜெபித்தாலும், ஸ்தோத்தரித்தாலும், ஆலயம் சென்றாலும் போதாது. தேவ சித்தமும் என்ன என்பதை பகுத்து உணர்ந்து அதை நிறைவேற்றவும் வேண்டும். அப்போது தான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் (மத்.7/21)

## 107. தேவ பிரசன்னத்தைப் பெறுவது எப்படி?

சைக்கிள் டயரிலுள்ள காற்றை கழற்றி விட்டால் சைக்கிள் போகாது. உலகம் முழுவதும் காற்று இருந்தாலும், சைக்கிள் ஓட வேண்டுமானால் காற்று டையரில் அடைக்கப்பட வேண்டும். அது போல தேவபிரசன்னத்தை நாம் இழுத்துக் கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையிலே தேவ பிரசன்னத்தை நாம் நாடி, தேட வேண்டும். தேவபிரசன்னம் இல்லாத இடத்தில் உடனே சாத்தான் வந்து விடுவான். ஆகவே சாத்தானுக்கு இடம் கொடாமல் தேவபிரசன்னத்துக்கு இடம் கொடுக்க வேண்டும். நாம் தான் பாவத்தை விட்டு விலக வேண்டும். பாவத்திற்கு இடம் கொடுக்கும் போது அசுத்த ஆவி உன் மூளைக்குள் வந்து பின்பு நேராக உன் இருதய வீட்டிற்குள் சென்று விடும் நீ பாவம் செய்யும் போது உன் இருதயத்திலே தேவன் இருக்கமாட்டார். தேவன் உலகம் முழுவதும் இருந்தாலும் தேவ பிரசன்னத்தால் நம் இதயம் முழுவதுமாக நிரப்பப்பட வேண்டும்.

சைக்கிள் டையரிலுள்ள காற்றுக்கு அளவு உண்டு. ஆனால் தேவ பிரசன்னத்திற்கு நாம் இடம் கொடுக்கும் போது தேவன் நம் இதயத்தை ஆலயமாக மாற்றுவார். நம் இதய வாசல்படியிருந்து ஒவ்வொரு நாளும் ஆண்டவர் தட்டிக் கொண்டேயிருக்கிறார். நம் இருதயம் ஆண்டவருக்காக மாத்திரம் திறக்கப்பட வேண்டும்.

நோவா, ஏனோக்கு போன்றவர்கள் தேவனோடு சஞ்சரித்தார்கள். தேவ பிரசன்னத்தைப் பெற்றுக் கொண்டார்கள். எந்தெந்த வழியிலெல்லாம் தேவ பிரசன்னத்தை பெற்றுக் கொள்ள முடியுமோ அந்தந்த விதங்களிலே தேவ பிரசன்னத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். 1 தேனீ தன் வாழ்க்கையில் 15,000 தேன்கூட்டிற்கு சென்று தேன் சேகரிக்குமாம். அது பிரயாசப்பட்டு சேகரிப்பது நமக்கு பிரயோஜனப்படுகிறது. நாம் பிரயோசப்படும் போது தான் தேவபிரசன்னத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

úRY ©WNu]jûRl ùT\

1. அதிகாலையில் தேவனைத் தேடுங்கள் – தாவீது எவ்வளவோ துன்பங்கள் மத்தியிலும் தேவ பிரசன்னத்தை இழந்து போகவில்லை. நாமும் தேவ பிரசன்னத்தைப் பெற அவர் இருதயத்திற்கு ஏற்றவர்களாக இருக்க வேண்டும்.

2. பாவ பிரசன்னத்தை வெறுக்க வேண்டும். – கண்களால் செய்கிற பாவத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது. இரட்சிக்கப்படாத நண்பர்களோடுள்ள ஐக்கியத்தை விட்டு விட வேண்டும். நம் ஐக்கியங்களைப் பொறுத்து தான் தேவபிரசன்னம் வரும். பாவிகளின் வழியில் நிற்கக்கூடாது. பரியாசக்காரர்கள் உட்காரும் இடத்திலே நாமும் உட்கார்ந்திருந்தால் தேவ பிரசன்னத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. தேவனோடும் அவர் பிள்ளைகளோடும் ஐக்கியமாயிருங்கள்.

3. எப்பொழுதும் தேவனோடு சஞ்சரித்து அவர் நினைவாக இருக்கும் போது தேவ பிரசன்னத்தால் நிரப்பப்பட முடியும்.

4. ஒழுங்காக தினமும் வேதம் வாசித்து, தியானித்து ஜெபிக்கும் போது தேவபிரசன்னத்தைப் பெற்று கொள்ள முடியும்.

5. விக்கிரக ஆலயத்திற்குள் போகக்கூடாது ; விக்கிரகத்திற்குப் படைத்தவைகளைப் புசிக்கக் கூடாது.

6. இராப்போஜன ஐக்கியத்தில் ஒழுங்காகப் பங்கெடுக்கும் போது தேவனோடு நாம் ஐக்கியப்படுகிறோம்.

7. 1 நாளில் 3 நேர மட்டுமே சாப்பிட வேண்டும். அதிகமாக புசித்தால் தேவ பிரசன்னத்தை இழந்து போவீர்கள்.

8. உபவாசிக்கிற நேரத்தில் உபவாசியுங்கள்.

9. துதிக்குள் நம் தேவன் வாசம் பண்ணுவதால் அவரை அதிகமாக துதித்துப் பாடி ஸ்தோத்தரிக்கும் போது தேவ பிரசன்னம் நம்மை நிரப்பும்.

**108. 'காணாமல் போன இளைய குமாரன்' உவமை எதைக் குறிக்கிறது?**

இது புதிதாக இரட்சிக்கப்பட்டு சபைக்கு வருகிற ஆத்துமாக்களைக் குறிக்கும். பாவ வழியில் சென்று கொண்டிருந்த ஆத்துமா புதிதாக இரட்சிக்கப்பட்டு வரும் போது உலகம் அவனை ஏற்றுக் கொள்ளாது ; ஆனால் ஆண்டவர் அவனை ஏற்றுக் கொள்வார். பழைய பாவத்தை விட்டு விடு, இனியாவது மனம் திரும்பு என சொல் அவனுக்கு உயர்ந்த வஸ்திரம் (இரட்சிப்பின் வஸ்திரம்) கொடுக்கிறார். கைக்கு மோதிரம் கொடுக்கிறார் ; அதாவது தேவபிள்ளையாகும்படி அதிகாரம் கொடுக்கிறார். விருந்து கொண்டாடுதல் நடக்கிறது. பழைய பாவ வாழ்க்கையை மன்னித்து தன் வீட்டிலே தகப்பன் அவனை ஏற்றுக் கொண்டது போல ஆண்டவர் சபையாகிய தம் வீட்டிலே சேர்த்துக் கொள்கிறார். உலகம் புறம்பாக்கினாலும், தேவன் அவனை புறம்பாக்காமல் தன்னை இளைய குமாரனாக அவனைச் சேர்த்துக் கொள்கிறார். உடனே மூத்த மகனைப் போல ஏற்கனவே இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு கோபம் வரக்கூடாது. தேவபிள்ளைகள் இரட்சிக்கப்பட்டு ஆலயத்திற்குள் வந்த பிறகு புதிதாக வருபவர்களின் கடந்த கால வாழ்க்கையைக் குறித்து பேசி அவதூறு செய்யக்கூடாது. கர்த்தர் கழுவினதை தீட்டாக எண்ணக்கூடாது (அப் 10/15). இப்பொழுது தான் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்ற ஆத்துமாவாக இருக்கலாம். அது தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்ற ஆத்துமா. பாவி என்று எவரையும் தள்ளுவதற்கு உனக்கு அதிகாரம் இல்லை. மூத்தகுமாரன் செய்தது போல செய்யக்கூடாது.

**109. 'காணாமல் போன வெள்ளிக்காசு' உவமை எதைக் குறிக்கிறது?**

10 வெள்ளிக்காசுகளும் ஆண்டவருக்கு பிரியமான, வெள்ளியைப் போல ஜொலித்து கொண்டிருந்த ஆத்துமாக்கள் தான். இந்த பத்தில் ஒன்று காணாமல் போய்விட்டது. இது எங்கே இருக்கிறது என தெரியவில்லை. ஆனால் இது வீட்டில் தான் கிடக்கிறது. இந்த ஆத்துமா இரட்சிக்கப்பட்டு சபைக்குள் தான் காணப்படுகிறது. ஆனால் பலவித பிரச்சினைகளால் பலன் கொடாமல் பிரயோஜனமில்லாமல் காணப்படுகிறது. ஆண்டவருக்காக கனி கொடுக்க விருப்பம் இருக்கிறது. ஆனால் கனி கொடுக்க முடியாமல் காணாமல் போன வெள்ளிக்காசு போல இருக்கிறது. காணாமல் போன வெள்ளிக்காசும் வேண்டும். புதிதாக உள்ள வெள்ளிக்காசும் வேண்டும். 1000 'வெள்ளிக்காசு' போன்ற ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண வேண்டும். 'ஆடுகள்' போன்ற 1000 ஆத்துமாக்கள் சம்பாதிப்பதை விட வெள்ளிக்காசு போன்ற பிரயோஜனமுள்ள 1000 ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவது மேலானது.

சோப்பு டப்பா போன்ற ஆத்துமாக்களல்ல ; சோப்பு போன்ற பிரயோஜனமுள்ள ஆத்துமாக்களை தேவன் தேடுகிறார். வெறும் சோப்பு டப்பா பார்வைக்கு அழகாயிருந்தாலும் அதில் சோப்பு இல்லாவிட்டால் பிரயோஜனம் இல்லை. சோப்பு டப்பா கரையாது ; ஆனால் சோப்பு கரைந்து பிரயோஜனப்படும். 2 வித ஆத்துமாக்கள் உண்டு.

1. சிலர் சோப் போல கரைந்து தங்களை அர்ப்பணித்து பிரயோஜனப்படுத்தப்படுவார்கள்.

2. சிலர் சோப் டப்பா போல எந்த பாடுகளையும் சகிக்கவோ, தங்களை அர்ப்பணிக்கவோ செய்ய மாட்டார்கள். இவர்கள் தேவனுக்கு பிரயோஜனபடாத ஆத்துமாக்கள். ஆகவே வெள்ளிக்காசு போன்ற பிரயோஜனப்படுகிற, பாடு சகிக்கிற பயனுள்ள ஆத்துமாக்களாக மாற வேண்டும்.

ù_Tm

ÏVYu LWj§p SmûU EÚYôdÏmT¥VôL JlTûPjÕ ù_©lúTôm:

அப்பா பிதாவே உலகத்துக்கும், பிசாசுக்கும், மாம்சத்திற்கும், சுயத்திற்கும் அடிமையாயிருப்பவர்களை முற்றிலும் விடுவியும்.

வெற்றியுள்ள வாழ்க்கை வாழ எனக்கு உதவி செய்யும். என்னை நொறுக்கும் ; உடையும் ; வனையும். நீர் விரும்புகிற பரிசுத்தம், நீர் விரும்புகிற சித்தம் என்னில் உருவாகத்தக்கதாக என்னை உம் கரத்திலே களிமண்ணாய் கொடுக்கின்றேன். குயவனே! குயவனே! உமக்கேற்ற விதமாய் வனைந்து மாற்றும். என் சித்தமோ, பிசாசு சித்தமோ, மனுஷசித்தமோ அல்ல, உம் சித்தம் என்னில் பூரணமாய் நிறைவேறத்தக்கதாய் என்னைக் கொடுக்கிறேன். உமக்கேற்ற பாத்திரமாய் உருவாக்கும்படி ஜெபிக்கிறேன். கர்த்தாவே! உம்மையும் என்னையும் பிரிக்கும் எந்த ஒரு காரியமும் வராதபடிக்கு என்றும் கிருபையால் காத்திடும். கர்த்தாவே! ஓட்டையான பாத்திரமாய் இருக்கிறேன் ; ஒன்றுக்கும் உதவாத பாத்திரமாய் இருக்கிறேன். நசுக்கப்பட்ட பாத்திரமாய், அழுக்குப்படிந்த பாத்திரமாய், நாற்றமுள்ள பாத்திரமாய், வெறுமையான, கசப்பு நிறைந்த பாத்திரமாக, மனுஷன் அவமதிக்கிற பாத்திரமாய் இருக்கிறேன். மனுஷனால் வெளியே எறியப்பட்ட அற்பமான பாத்திரம் போல இருக்கிறேன். எல்லாராலும் வெறுக்கப்பட்டு, தள்ளப்பட்ட பாத்திரம் போல இருக்கிறேன்.

குயவனே! படைப்பின் காரணனே! களிமண்ணான என்னையும் கண்ணோக்கிப் பாரும். மனுஷரால் புறக்கணிக்கப்பட்டாலும் தேவனால் உயர்த்தப்பட முடியும் என்பதை விசுவாசிக்கிறேன் கர்த்தாவே, உமக்குகந்த பாத்திரமாய் என்னை மாற்றி, உம் இரத்தத்தால் என்னைக் கழுவி, என் பாத்திரத்திலுள்ள பாவ நாற்றமெல்லாம் மாற்றி என்னை முற்றிலும் சுத்தமாக்கி, நற்பாத்திரமாய், பொற்பாத்திரமாய், நீர் விரும்பும் பாத்திரமாய், உம் சித்தம் செய்யும் பாத்திரமாய் என்னை மாற்றும்படியாய் ஒப்புக்கொடுக்கிறேன்.

நீர் கண்மணிபோல காக்கும் பாத்திரமாய், நீர் உம் வலதுகரத்தில் வைத்து பயன்படுத்தும் பாத்திரமாய், உம் சித்தம் செய்யும் உமக்குப் பிரியமான பாத்திரமாய், உம் வல்லமை, அன்பு, ஆவியை வெளிப்படுத்தும் பாத்திரமாய், உம்மை மகிமைப்படுத்தும் பாத்திரமாய் என்னை மாற்றும். உம் ஆவியால், அன்பால், வல்லமையால், அற்புதங்களால், ஞானத்தால் நிரப்பும். உமக்கு உகந்த பாத்திரமாய் என்னை மாற்றினபடியால் ஸ்தோத்திரம். ஆமென்.

## RtT¬úNôRû]d úLs®Ls

**201.** சாத்தானுக்கு முன்பாக முழங்காற்படியிடுகிறாயா? அல்லது கர்த்தரைத் தொழுது கொள்கிறாயா?

ரோமர் 10/13 ; 11/4

**202.** நான் மற்றவர்களை விட பரவாயில்லை என வீண் பெருமை கொள்ளுகிறாயா?

ரோமர் 11/18

**203.** கர்த்தருடைய சிந்தையை அறிந்திருக்கிறாயா?

ரோமர் 11/34

**204.** உன் சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக் கொடுத்திருக்கிறாயா?

ரோமர் 12/1

**205.** உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கிறாயா?

ரோமர் 12/2

**206.** தேவன் உன் வாழ்வில் கொண்டுள்ள பரிபூரண சித்தத்தை அறிந்து செயல்படுகிறாயா?

ரோமர் 12/2

**207.** கர்த்தர் கொடுத்த ஊழியத்தை அவர் சித்தப்படி செய்கிறாயா?

ரோமர் 12/7

**208.** உன் அன்பு மாயமற்றதாயிருக்கிறதா?

ரோமர் 12/9

**209.** சகோதரசிநேகம் உன்னில் உண்டா?

ரோமர் 12/10

**210.** கனம் பண்ண வேண்டியவர்களை கனம் பண்ணுகிறாயா?

ரோமர் 12/10

**211.** ஆவியிலே அனலாய் இருக்கின்றாயா?

ரோமர் 12/11

**212.** நீ யாருக்காக ஊழியஞ்செய்கிறாய்? கர்த்தருக்காகவா? மனிதனுக்காகவா?

ரோமர் 12/11

213. உபத்திரவத்தில் பொறுமையோடு இருக்கின்றாயா?

ரோமர் 12/12

214. ஜெபத்திலே உறுதியாக தரித்திருக்கின்றாயா?

ரோமர் 12/12

215. பரிசுத்தவான்களுடைய குறைவில் உதவி செய்கின்றாயா?

ரோமர் 12/13

216. அந்நியரை உபசரிக்கின்றாயா?

ரோமர் 12/13

217. உன்னைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிக்கின்றாயா? அல்லது சபிக்கின்றாயா?

ரோமர் 12/14

218. பிறர் நலனில் சந்தோஷப்படுகிறாயா?

ரோமர் 12/15

219. பிறர் துக்கத்தில் பங்கெடுத்து அழுது ஜெபிக்கின்றாயா?

ரோமர் 12/15

220. மேட்டிமையான சிந்தை உன்னில் உண்டா?

ரோமர் 12/16

221. உன்னையே புத்திமான் என எண்ணுகிறாயா?

ரோமர் 12/16

222. தீமைக்குத் தீமை செய்து பழிவாங்கும் குணம் உன்னில் உண்டா?

ரோமர் 12/17

223. எல்லாரோடும் சமாதானமாயிருக்கிறாயா?

ரோமர் 12/18

224. தீமையினாலே நீ வெல்லப்படுகிறாயா? அல்லது தீமையை நன்மையினால் வெல்லுகின்றாயா?

ரோமர் 12/21

225. மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்படிகிறாயா? அல்லது எதிர்த்து நிற்கின்றாயா?

ரோமர் 13/1

(தொடரும்)

# புதிய வெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**
(இணையதள முகவரி : www.hosannahchurch.org)

3. **FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா - ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி - ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் - ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் - ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS (அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி** - 627 109, **தமிழ்நாடு.** ☎ : (954637) 245273
WEB: www.hosannahchurch.org